தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் தேவைக்கு ஏற்ப, பெரிய முன்னோர்களுக்கு சிலை வைப்பதாக இருந்தாலும் சரி, பெரிய தலைவர்களின் பெயரை மற்றவற்றிற்கு சூட்டுவதாக இருந்தாலும் சரி, புரட்சித் தலைவி அவர்கள் முன்னுரிமை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கிற கேள்வி, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து, காமராசர் பெயரை சூட்ட முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். பிரிக்கின்ற சாத்தியக்கூறுகளே இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 147, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

147—

பூம்புகார் பகுதியில் அணை கட்டுதல்

*17266—**திரு. எம். பூராசாமி:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் கடைமடைப் பகுதியில் மழைத் தண்ணீரைச் சேமிக்க உலக வங்கி உதவியுடன் அணை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூம்புகார் கடைமடைப்பகுதியில் உலக வங்கி உதவியுடன் அணை கட்டி மழைத் தண்ணீரைத் தேக்கும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் காவிரி ஆறு பூம்புகாரில் கலக்கிறது. காவிரித் தண்ணீரைத் தந்து நமக்கெல்லாம் கண்ணீரைத் துடைத்த தானைத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் காவிரி ஆறு கலக்கும் இடமான பூம்புகாரில் தண்ணீரை சேமித்து வைத்தால், அங்கே பல லட்சக்கணக்கான ஏக்கர்களில் பயிர் செய்யும் விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பயன் பெறுவார்கள். எவ்வளவோ நிதிகளை நாம் பல நல்ல பணிகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, தயவுசெய்து, பொதுப் பணித் துறை அமைச்சர்

1995 மார்ச் 29]

அவர்கள் இந்தக் காவிரித் தண்ணீரை சேமித்து வைக்க அணை கட்டினால் பல்லாயிரக்கணக்கான ஏழை விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க ஏதுவாக இருக்கும் என்று கூறி, இந்த அணையை வருகின்ற நிதி ஆண்டிலாவது கட்ட அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அணை கட்டுகின்றபோது நிலங்கள் கையகப்படுத்த வேண்டி இருக்கின்றது. அந்தப் பகுதியிலே நிலங்கள் கையகப்படுத்துவதற்குப் போதுமான அரசு புறம்போக்கு நிலங்கள் இல்லை; அனைத்தும் பட்டா நிலங்களாக இருக்கின்றன. அதுவும், விலை குறைந்த நிலங்கள் அந்தப் பகுதியிலே கிடையாது, விலை அதிகமான நிலங்கள்தான் இருக்கின்றன. அது தவிர அந்த அணையைக் கட்டி பாசனம் செய்யும்போது அதற்குப் போதுமான விளைச்சல் நிலங்கள் வேண்டும். ஏற்கெனவே காவிரி ஆற்றின் பகுதியிலே கால்வாய்கள் மூலம் நாம் தண்ணீரைப் பாய்ச்சுகிறோம். ஆகவே, எல்லா நிலங்களுக்கும் ஓரளவு தண்ணீர் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, புதிதாக அணை கட்டுகின்றபோது இதுபோன்றவைகளை எல்லாம் பரிசீலித்துதான் அணை கட்ட முடியும். மேலும், பூம்புகார் கடைமடைப் பகுதி 50 அடி மட்டக் கோட்டிற்குக் கீழே, அதாவது கான்டூர் லைனுக்கு கீழே இருக்கின்ற காரணத்தினாலே, விளைச்சல் நிலங்களான காவிரி டெல்டா சமவெளியாக இருக்கின்ற காரணத்தினாலே, தற்போதுள்ள இருப்பு விளைச்சல் நிலங்கள் பாதிக்காத அளவில் நீரைத் தேக்கி சிக்கனமாக அணையைக் கட்டுவது என்பது சாத்தியமாகாது. இந்த அணை கட்டுவதன் மூலம் பயன்படும் விளை நிலங்கள் போதிய அளவுக்கு இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் அந்தப் பகுதியில் அணை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று நான் தெரிவித்தேன். ஆகவே, அதுபோன்ற சூழ்நிலை இப்போது இல்லை. ஆகவே, பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10–30*

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி என்பது ஒரு வரலாற்று சிறப்புமிக்க தொகுதியாகும். அங்கே கண்ணகி, கோவலன், மாதவி, மணிமேகலை இளங்கோவடிகள் வாழ்ந்த ஊர். மேலும் கரிகால் சோழன்..

[*1995 மார்ச் 29*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றையும் திருத்திவிடக்கூடாது. கண்ணகி, மாதவியோடு நிறுத்திக்கொள்ளவும். (சிரிப்பு)

திரு. எம். பூராசாமி: அந்த ஊர் காவிரிபூம்பட்டினம் ஆகும். அங்கே காவிரி தண்ணீர் அதிகமாக கடலில் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. அந்த வீணாகிற தண்ணீரை ஏதாவது நிதியாதாரத்தைப் பெற்று - இன்றைக்கு நம்முடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் ஒரு திட்டம் குறித்து உலக வங்கியில் கேட்டால் உடனே அவர்கள் நிதியை கொடுக்கிறார்கள். காரணம் அத்தகைய ஒப்பற்ற நிர்வாகத் திறமை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் இருக்கிறது. ஆகவே, உலக வங்கி நிதியைப் பெற்று வருகிற ஆண்டிலாவது இதனை நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியில் வெள்ளப்பெருக்கு எடுக்கிறபோது வெள்ளக் காலங்களில் மட்டும் ஏறத்தாழ 600 கன அடி நீர் கடலுக்குள் சென்று விடுகிறது. இது கடலுக்கு அருகில் சுமார் 30 சதுர மைல் தொலைவில் பெய்கிற மழையால் ஏற்படுகிற நீராகும். எல்லாக் காலங்களிலும் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதில்லை. ஏதோ குறிப்பிட்ட காலங்களில்தான் இப்படி ஏற்படுகிறது. ஆனால் அந்தப் பகுதியில் பெய்கிற மழையின் அளவை கணக்கெடுக்கிறபோது ஏறத்தாழ 30 சதுர மைல் அளவில் பெய்கிற மழையால் ஏற்படுகிற வெள்ளம்தான் அந்தப் பகுதியில் வருகிறது. அதைத் தேக்கி வைப்பதற்கு இவ்வளவு பெரிய திட்டங்களை நிறைவேற்றுவது என்பது பொருளாதார ரீதியாக சாத்தியக்கூறு இல்லை என்ற காரணத்தால்தான் நான் ஏற்கெனவே அந்தப் பதிலைத் தெரிவித்தேன். ஆகவே, அதுபோன்ற திட்டம் ஆய்விலே இல்லை. உலக வங்கியில் நிதியைப் பெறுகிறபோது அந்த நிதியைப் பெற்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகிறபோது 'பெனிபிட் காஸ்ட் ரேஷியோ' இருக்கிறதா என்று பார்த்துச் செய்கிறோம். எந்தத் திட்டத்தை வேண்டுமானாலும் உலக வங்கியில் கடன் வாங்கி நிறைவேற்றி விட முடியாது. கடன் வாங்குகிறபோது. திட்டத்தை நிறைவேற்றுகிறபோது மக்களுக்குப் பயனளிக்கிற விதத்தில் அந்தத் திட்டங்கள் இருந்தால்தான்--கடன் பெற்றால் கூட--அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இதுபோன்ற திட்டங்களில்

1995 மார்ச் 29]

அப்படிப்பட்ட சாத்தியகூறுகள் இல்லாத காரணத்தால்தான் இதை எடுக்க முடியாது என்று தெரிவித்தேன். ஆகவே, தற்போது இதைப் பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. து. மூர்த்தி.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் அந்தச் சாத்தியக்கூறு இல்லாவிட்டாலும்கூட என்னுடைய சீர்காழி தொகுதியில் கொள்ளிடம் ஆற்றுத் தண்ணீர் நிறைய வீணாகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல தேவையான விளை நிலங்கள், அதைப்போல விலை குறைவான நிலங்கள், வாங்குவதற்கான சூழ்நிலை அங்கே அதிகமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய பகுதியில் அந்த அணையைக் கட்டி, ஏழை விவசாயிகளுக்கு எல்லாம் பயன்படுகிற வகையில் அந்தத் தண்ணீரைத் தேக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணை கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடத்தைப் பொறுத்தவரையில் காவிரி பெருக்கெடுத்தால் கொள்ளும் இடம் கொள்ளிடம். காவிரி பெருக்கெடுக்கிறபோது அந்தத் தண்ணீரை வெளியேற்றுவதற்கு நாம் கொள்ளிடம் ஆற்றைப் பயன்படுத்துகிறோம். எல்லாக் காலங்களிலும் வெள்ளம் வருவதில்லை. நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல அந்தப் பகுதியில் பட்டா நிலங்களும் தோப்புகளுமாக இருக்கின்றன. இவையெல்லாம் விலை உயர்ந்த நிலங்களாக இருக்கின்றன. இவைகளைக் கையகப்படுத்தி, அணை கட்டி பாசனப் பணிகளைச் செய்கிறபோது, அந்தப் பகுதியில் எவ்வளவு நிலங்களுக்கு நாம் பாசனம் செய்ய முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். பொதுவாக தஞ்சை மாவட்டத்தில் காவிரி பாய்கிற காரணத்தால் கால்வாய்கள் மூலமாக நாம் தண்ணீரை பாய்ச்சிக் கொண்டிருக்கிறோம். இன்னும் பல பகுதிகளில் வறட்சி மிகுந்த பகுதிகளில் எல்லாம் அணைகளைக் கட்டி அந்தப் பகுதியில் தண்ணீரைத் தேக்கி பாசன மேம்பாட்டைச் செய்தால் அது உபயோகமாக இருக்கும். ஆகவே இந்தக் காவிரி பகுதியில் அதைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆசைமணி.

[1995 மார்ச் 29

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் காவிரி ஆறும், அதனுடைய உப்நதிகளும் கடலில் கலக்கின்றன. மழை நேரங்களில் அதிகமான தண்ணீர் வீணாக கடலில் கலக்கிற அந்தச் சூழ்நிலையை மாற்றி, வீணாகும் நீரை தேக்கி வைத்து அல்லது திருப்பி விட்டு, மீண்டும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் பாசனத்திற்கு உபயோகப்படும் அளவுக்கு திட்டம் வகுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே இதுபோன்ற கோரிக்கைகள் ஏற்கெனவே வைக்கப்பட்டன. இது சம்பந்தமாக நம்முடைய பொதுப் பணித்துறை அதிகாரிகளும் வல்லுநர்களும் சேர்ந்து ஒரு ஆய்வினைச் செய்தார்கள். அதற்குப் பின்னாலேதான் இப்படிப்பட்ட தகவல்களை இங்கே தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே இந்தக் கோரிக்கை நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றவுடனே, தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே வைக்கப்பட்டது. தஞ்சாவூர் பகுதியிலே இந்த மாதிரிப் பிரச்சினைகள், வீணாகின்ற நீரை நாம் தேக்கி வைக்க முடியுமா அதற்குச் சாத்தியகூறுகள் இருக்கின்றனவா, குளம் குட்டைகளை அமைக்க முடியுமா? அணைக்கட்டுகளை அமைக்க முடியுமா, என்பதை எல்லாம் ஆய்வு செய்ய வேண்டும் என்று பொதுப் பணித்துறை வல்லுநர்களிடத்திலே தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக Planning and design department மற்றும் கோ-ஆர்டினேட் செய்கின்ற அனைத்துத் துறைகளும் சேர்ந்து ஆய்வினைச் செய்ததற்குப் பின்னாலேதான் இப்படிப்பட்ட தகவல்களைத் தந்திருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இதை வலியுறுத்துகின்றபோது, இதுபற்றி மேலும் பரிசீலிக்க இயலுமா என்பதை மறுபடியும் ஆய்வு செய்யச் சொல்லி, நம்முடைய அதிகாரிகளுக்கு நான் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாத்தியக்கூறுகள் இருந்தால் மாத்திரம் இதுசம்பந்தமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். இல்லை என்றால், பரிசீலிக்க இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.